# பரீட்சகரின் அறிக்கை

### திறமை (திறன்) கப்ஸ்ரோன் பரீட்சை – 2018 யூலை

## (SS2) தகவல் தொழில்நுட்பவியல் திறன்கள்

இவ்வினாப்பத்திரத்தின் பிரதான நோக்கம் தகவல் தொழில்நுட்பவியல் மீதான ஒட்டுமொத்த அறிவையும் அவ்வறிவினை அலுவலகச் சூழலில் பிரயோகிக்கும் திறனையும் பரீட்சிக்கும் அதேவேளை அலுவலகப் பிரயோக மென்பொருள் மீது அதிக கரிசினையைச் செலுத்துவதாகும். இவ்வினாப்பத்திரத்திற்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு நடைமுறை அறிவு, அலுவலகச் சூழல் ஒன்றில் தகவல் தொழில்நுட்பவியல் செயலிகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பவை பற்றி அவதானம் செலுத்தியிருப்பது முக்கியமானதாகும்.

## பகுதி A

இருபது (20) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 40 புள்ளிகள்)

**<u>வினா 01</u>**

இவ்வினா பிரதானமாக பொதுவான தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அலுவலகப் பணிகளுடன் தொடர்புடைய தொகுதிகள் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தியிருந்தது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்ததுடன் அவர்களில் பலரால் ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் 20 – 30 புள்ளிகள் வரை பெறக்கூடியதாக இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் தரப்பட்ட விடைகளிலிருந்து சரியான விடையினை வெற்றிகரமாகத் தெரிவு செய்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அதாவது, வினா இல.**1.11** தொடக்கம் **1.16** வரை. பாடத்தை நன்றாக விளங்கிக்கொண்டிருந்த பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி B</u>

ஏதாவது நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுதல் வேண்டும்.
(மொத்தம் 60 புள்ளிகள்)

**<u>வினா 02</u>**

இவ்வினா தரவுத்தள முகாமைத்துவம் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித் திருந்தனர். அவர்களில் பலருக்கு பகுதி (a) மற்றும் பகுதி (b) யிற்கு சரியாக விடையளிக்கக் கூடியதாக இருந்தது. அவர்கள் முறையான நியாயப்படுத்தலுடன் சரியான பிரதான புலத்தினை அடையாளங் கண்டிருந்தனர். மிகக் குறைந்தளவான பரீட்சார்த்திகளால் மாத்திரமே ‘‘தேசிய அடையாள அட்டை இலக்கம்’’ மற்றும் ‘‘அதிகபட்ச மேலதிக நேர மணித்தியாலங்கள்’’ ஆகிய புலங்களுக்கான சரியான தரவு வகையை அடையாளங் காண முடியவில்லை. அவர்கள் தேசிய அடையாள அட்டை இலக்கத்திற்காக “Number” இனையும் அதிகபட்ச மேலதிக நேர மணித்தி யாலத்திற்காக “Date/Time” இனையும் தரவு வகைகளெனப் பிழையாகக் குறிப்பிட்டிருந்தனர்.

**பகுதி (c)** யிற்கு, பெரும்பாலான பரீட்சார்த்திகளால் வினவல்கள் தரவுத்தளத்திற்கு எவ்வாறு பிரயோசனமுடையதாக இருக்க முடியும் என்பதை விபரிப்பதற்கு இயலாமற் போயிருந்தது. அவர்களுக்கு வினவல்கள் பற்றிய தெளிவான புரிதல் காணப்படவில்லை. பரீட்சார்த்திகள் தரவுத்தளத் தொழில்நுட்பவியல்களைக் கற்பதில் விசேட கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானது.**

## <u>வினா 03</u>

தரப்பட்ட விரிதாள் ஒன்றில் அடிப்படைக் கணிப்பீடுகளைச் செய்வதற்காக சூத்திரங்களை அடையாளங் காணுகின்ற பரீட்சார்த்திகளின் ஆற்றலைப் பரீட்சிப்பது இவ்வினாவின் மூலம் எதிர்பார்க்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்தனர். **பகுதி (a)** யிற்காக, பொருத்தமான சூத்திரத்தின் முழுமையான தொடர்புகளைச் சரியாகக் குறிப்பிடுவதற்கு ஒரு சில பரீட்சார்த்திகளால் மாத்திரமே இயலுமாக இருந்தது. **பகுதி (b)** மற்றும் **(c)** யிற்காக, சரியான சூத்திரத்தை அடையாளங் கண்டு IF பணிக்கூறினைப் பயன்படுத்தி தருக்கரீதியான சோதனையைச் செய்வதில் சில பரீட்சார்த்திகள் சிரமப்பட்டிருந்தனர். **பகுதி (b)** மற்றும் **(c)** யிற்கான சூத்திரத்தில் பல வழுக்கள் காணப்பட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

பகுதி **(d)** யிற்காக, பெரும்பாலான பரீட்சார்த்திகளால் தரப்பட்ட பணிக் கூறுகளுக்கான விளைவுப் பெறுமானத்தை அடையாளங் காண முடியாது போயிருந்தது. மைக்ரோசொப்ற் எக்செல் தொடர்பில் அதிகமான செய்முறை அறிவினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென பரீட்சார்த்திகளுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை மத்திமமாகக் காணப்பட்டது.**

## <u>வினா 04</u>

அலுவலகச் சூழல் ஒன்றில் தொடர்பாடலை மேற்கொள்வதற்காக அனுப்பப்படுகின்ற மின்னஞ்சல் தொடர்பான பரீட்சார்த்திகளின் ஆற்றலைப் பரீட்சிப்பதை இவ்வினா எதிர்பார்த்திருந்தது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளிக்க முயன்றிருந்தனர். மேலும் 6 தெரிவு வினாக்களிலும் மிகவும் திருப்திகரமாக விடையளிக்கப்பட்ட வினாவும் இதுவேயாகும். பல பரீட்சார்த்திகளுக்கு இதற்கான முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்த அதே வேளை சிறிய தொகையினர் மின்னஞ்சல் signature Text இனை சரியாகக் குறிப்பிடாத காரணத்தால் சில புள்ளிகளை இழந்திருந்தனர். மேலும் குறைந்த எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் பதிலளிப்பதற்குப் பொருத்தமான attachment ஆக வினாவில் தரப்பட்டிருந்த அதே attachment இன் பெயரையே (GCELAL.PDF) குறிப்பிட்டிருந்தனர்.

மின்னஞ்சல் தொடர்பாடல்களை மேற்கொள்ளுதல் தொடர்பான பரீட்சார்த்திகளின் செய்முறை அறிவு மேலும் மேம்படுத்தப்பட வேண்டும்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சிறப்பானதாகும்.**

## வினா 05

இங்கு, உலாவல் சாளரங்கள், VPNs, இணைய வங்கிச் சேவை மற்றும் QR குறியீடுகள் போன்ற பல்வேறு பரப்புகள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்தனர்.

பகுதி **(a)**, **(b), (c)** ஆகியவற்றுக்கான செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்த போதிலும் பகுதி **(d), (e)** ஆகியவற்றுக்கு மிகக் குறைந்தளவு பரீட்சார்த்திகளால் மாத்திரமே சரியாக விடையளிக்கக் கூடியதாக இருந்தது.

பகுதி **(b)** இற்காக, செல்லிடப்பேசி இணைப்பிற்குப் பணத்தைச் சேர்ப்பதற்கு "reload" அம்சம் பயன்படுத்தப்படுகிறது எனக் குறிப்பிடப்பட்டிருந்த பல விடைகள் காணப்பட்டன.

பகுதி **(d) யில்,** பல பரீட்சார்த்திகள் தரப்பட்ட கூற்றுடன் இணங்கவில்லை. இந்த விடயம் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு நாளது வரை இற்றைப்படுத்தப்பட வேண்டும். அதிகமான பரீட்சார்த்திகள் தொடரறா நிலை (ஒன்லைன்) வங்கிக் கொடுக்கல் வாங்கல்களில் பயன்படுத்தப்படுகின்ற விரல் அடையாளம் பற்றிய அறிவினைக் கொண்டிருக்கவில்லை என்பது அவர்கள் வழங்கியிருந்த விடைகளிலிருந்து தெரிய வருகிறது.

பகுதி **(e) யிற்காக,** மிகச் சில பரீட்சார்த்திகளால் மாத்திரமே விடையான QR code / 2D Barcode என்பதைச் சரியாக அடையாளங் காண முடிந்திருந்தது. ஆயினும் பெரும்பாலான பரீட்சார்த்திகளால் அவற்றின் பயன்பாட்டிற்கான உதாரணங்களை வழங்க முடிந்திருந்தது.

புதிய விடயங்கள் அடிக்கடி தொழில்நுட்பச் சூழலில் சேர்க்கப்பட்டுக்கொண்டிருப்பதால் பரீட்சார்த்திகள் தங்களது அறிவினை நாளது வரை இற்றைப்படுத்தி வைத்திருப்பதில் விழிப்புடன் இருத்தல் அவசியமாகும்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாகும்.**

## வினா 06

இங்கு, தரப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் வழங்கப்பட்ட கூறுகள் ஒவ்வொன்றையும் மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் மைக்ரோசொப்ற் வேட் இன் அம்சங்களை அடையாளங் காண்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் வினாவில் தரப்பட்ட அறிவுறுத்தல்களை தவறாக விளங்கிக்கொண்டிருந்தனர். இங்கு வினாவில் என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதை விளங்கிக் கொள்வதற்காக உதாரணமொன்று தெளிவாக வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த அறிவுறுத்தல் களையோ, உதாரணத்தையோ கவனத்திற்கொள்ளாது பரீட்சார்த்திகள் ஆரம்பத்திலிருந்தே துண்டுப் பிரசுரத்தை உருவாக்குவதற்கு முயற்சி செய்திருந்தனர். உதாரணமாக, பகுதி **(a)** யிற்கு, "REEMIX MID – Year Clearance Sale" என்னும் உரைப் பகுதியின் தோற்றத்தை மாத்திரம் மாற்றுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட போதிலும், பரீட்சார்த்திகள் முழுத் துண்டுப்பிரசுரத்தையும் மாற்றுவதற்கான படிமுறைகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

வினாக்களுக்கு விடையளிக்குமுன் வினாவைக் கவனமாக வாசித்து விளங்கிக்கொள்வது முன் தேவைப்பாடு ஒன்றாக இருக்கிறது. எவ்வாறாயினும் **பகுதி (b)** மற்றும் **பகுதி (f)** இற்காக ஒதுக்கப் பட்டிருந்த புள்ளிகளைப் பெரும்பாலான பரீட்சார்த்திகள் பெற்றிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் மைக்ரோசொப்ற் இலுள்ள "Drop Cap" போன்ற அம்சங்கள் தொடர்பிலும் "Crop" போன்ற கருவிகள் தொடர்பிலும் விழிப்புணர்வைக் கொண்டிருக்கவில்லை என்பதை அவர்களின் விடைகளிலிருந்து அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் காணப்படவில்லை.**

## வினா 07

முன்வைப்பு மென்பொருள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு இவ்வினாவின் மூலம் பரீட்சிக்கப்பட்டது. குறைந்த அளவு பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்தனர். அவர்களில் மிகச் சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளே சில நியாயமான அளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். பரீட்சார்த்திகளால் **பகுதி (a)**, உப பிரிவுகள் **(iv), (vi)** ஆகிய வற்றுக்கு மாத்திரமே விடையளிக்கக்கூடியதாக இருந்தது. அதுகூட உரிய அம்சத்தின் பெயரின் கருத்தினை அனுமானித்ததன் மூலமே நடைபெற்றிருந்தது. ஆயினும், உப பிரிவுகளின் மீதிப் பகுதிகளுக்கான விடைகள் திருப்திகரமானதாக இருக்கவில்லை.

பகுதி **(b)** யிற்காக, சில பரீட்சார்த்திகள் விசைப் பலகையைப் பயன்படுத்தி முன்வைப்பினை ஆரம்பிக்க முடியும் என குறிப்பிட்டிருந்தனர் ஆயினும் எந்தெந்த விசைகளைச் சேர்த்து ஆரம்பிக்க முடியுமென்ற விபரத்தினைக் குறிப்பிடத் தவறியிருந்தனர். பவர்பொயின்ட் அம்சங்கள் பற்றிய புரிதலை மேம்படுத்த வேண்டும் என்பதுடன் பிரதான விடயங்கள் மீது கூடிய கவனத்தையும் செலுத்துதல் வேண்டும்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மோசமானதாகக் காணப்பட்டது.**

\- - -

### பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்

1. முழுப் பாடத்திட்டத்தையும் ஆழமாகப் படிக்கவும்.
2. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.
3. தகவல் தொழில்நுட்பவியலுடன் தொடர்புடைய பாடப்புத்தகங்கள், நூல்கள் கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனையவற்றை வாசிக்கவும்.
4. விடைகளை எழுதும்போது தேவையாயின் உதாரணங்களை வழங்கி, ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் தகவல் தொழில்நுட்பவியலுடன் தொடர்புடைய கோட்பாட்டு ரீதியானதும் செய்முறை ரீதியானதுமான அறிவை சமர்ப்பிப்பது முக்கியமானதாகும்.
5. கையெழுத்து விளங்கக்கூடியதாக இருப்பதையும் விடைகளுக்கு இலக்கமிடப்பட்டிருப்பதையும் உரிய முறையில் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.
6. வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.
7. உமது அறிவை மேம்படுத்திக்கொள்வதற்காக கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் விடைகளை ஆராய்ந்து பார்க்கவும்.
8. நேரத்தை வினைத்திறனான வகையில் செலவிடவும்.
9. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், விடைகள் சரியாக இலக்கமிடப்பட்டுள்ளனவா என்பதை இருமுறை பரீட்சிக்கவும்.
10. நல்ல தயார்படுத்தலுடனும் சித்தியடைதல் என்னும் நோக்கத்துடன் பரீட்சையினை எழுதவும்.

\- * * * -